**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டுர்,**
**தேதி: 30.06.2025**
**OS. No. 80/2020**
**வழக்கு சாட்சி PW.1–காந்தாமணி , க/பெ.தங்கமணி**

(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து 1, 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் )

**1, 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

19) 1ம் பிரதிவாதி எங்களுக்குள் காடு சம்மந்தமாக பிரச்சனை வந்தபோது 2 கன்னுகுட்டிகள் வைத்திருந்தார், 1 மாதத்தில் அதை விற்றுவிட்டார். 1ம் பிரதிவாதி காலம் காலமாக 4 மாடுகள் வைத்து, பால் கரந்து விவசாயமும் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. நாங்கள் எங்கள் காட்டில் சோளம், தட்டப்பயிர் போன்ற தானியங்கள் விவசாயம் செய்து வருகிறோம். அவ்வாறு எங்கள் காட்டில் விவசாயம் செய்து வருவதை காண்பிக்க அடங்கல் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை, அரசு புறம்போக்கு நிலம் என்பதால் அடங்கல் இல்லை.

20) தாவா சொத்து அரசு புறம்போக்கு நிலம் என்பதை காண்பிக்க ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை, பத்திரம் தாக்கல் செய்துள்ளோம். 1ம் பிரதிவாதியின் பெயரில் தான் தாவா சொத்திற்கு அடங்கல் உள்ளதால், நான் கேட்டபோது வருவாய் துறையில் அடங்கல் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி தான் தாவா காட்டை அனுபவித்து வந்தார் என்றும், என் கணவர் அங்கு பண்ணை வேலை செய்ததால் வீடு கட்டுவதற்கு 1ம் பிரதிவாதி தான் இடம் கொடுத்தார் என்றால் சரியல்ல. என் கணவருக்கு இடம் கொடுத்ததால், எனக்கும் 2 பிள்ளைகள் உள்ளதாக சொல்லி இடம் கொடுக்குமாறு 1ம் பிரதிவாதியை தொந்தரவு செய்து வந்தேன் என்றால் சரியல்ல. கொரோனா ஊரடங்கின் போது 1ம் பிரதிவாதி காட்டை சுத்தம் செய்து கொண்டிருந்தார் என்றும், நான் தான் இடம் கொடுக்காமல் காட்டிற்குள் நுழையக்கூடாது என்று பிரச்சனை செய்தேன் என்றால் சரியல்ல.

21) 02.07.2020ம் தேதியில் 1ம் பிரதிவாதி காட்டை உழவு செய்தபோது நான் தடுத்ததால் கருமலைக்கூடல் காவல் நிலையத்தில் என் மீது 1ம் பிரதிவாதி புகார் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. 03.07.2020ல் எங்களுக்குள் பஞ்சாயத்து வைத்தோம். அந்த பஞ்சாயத்தில் யார் யார் கலந்துகொண்டனர் என்று குறிப்பாக எனது நிருபண வாக்குமூலத்தில் நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல, 1ம் பிரதிவாதி தான் அழைத்து வந்தார். காவல் நிலையத்தில் என் மீது அளித்த புகாரின் பேரில் குற்றவழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், அதிலிருந்து தப்பிப்பதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது மகன் குற்றவழக்கில் குற்றவாளி என்றும், அதனால் அவரிடமிருந்து தன்னை பாதுகாக்க அ.வ.எண்.102/2020 தாக்கல் செய்யவேண்டிய அவசியம் ஏற்பட்டது என்றால் சரியல்ல.

22) நாங்கள் தாக்கல் செய்த ரசீதுகள் அனைத்தும் 1ம் பிரதிவாதி கொடுத்த 3 சென்ட் நிலத்திற்குண்டானது என்றும், அதை தான் நாங்கள் தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதியின் அனுமதியின் பேரில் ரசீதுகள் எங்கள் பெயருக்கு கொடுக்கப்பட்டுள்ளதால், அந்த ரசீதுகள் 1ம் பிரதிவாதியை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. இந்த வழக்கில் 3ம் பிரதிவாதி என் நாத்தனாரின் 2வது மகன் ஆவார். 2ம் பிரதிவாதி மின் வாரியத்தில் பணி செய்து வருகிறார். 3ம் பிரதிவாதி கதிரவன் என்ன வேலை செய்கிறார் என்றால் கூலி வேலை செய்கிறார். 3ம் பிரதிவாதிதான் 1ம் பிரதிவாதியுடன் சேர்ந்து காட்டை பராமரித்து வருகிறார் என்றால் சரியல்ல.

23) நான் தான் 1ம் பிரதிவாதியையும், அவரது குடும்பத்தாரையும் மன உலைச்சல் செய்து பிரச்சனை செய்து வருகிறேன் என்றும், அதனால் இந்த வழக்கு செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

ஒம்/–திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.